அ.வ.எண். **201/2023** வா.சா.**3–**ஆசைத்தம்பி **26.09.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, அனுமதியின்பேரில் கூடுதல் முதல் விசாரணை

01.08.2019 தேதியிட்டு, பசுபதிபாளையம் காவல்நிலைய உதவி ஆய்வாளரிடம் நான் கொடுத்த புகார்மனு நகல் வா.சா.ஆ.19

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சங்கீதாவுக்கும், ராமமூர்த்திக்கும் நடந்த திருமணம் பற்றி எவ்வளவு நாள் கழித்து அவர்களது பெற்றோர்களுக்கு தெரியவந்தது என்றால் ஒருமாதத்தில் தெரிய வந்தது. சங்கீதாவும், ராமமூர்த்தியும் திருமணத்திற்கு பிறகு, அவரது பெற்றோர்கள் தொந்தரவு செய்யக்கூடாது என காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தனர். சங்கீதா, ராமமூர்த்தி, வெங்கடாசலம், செண்பகவள்ளி ஆகியோர் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தனர் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்திற்கு நான் சென்றுள்ளேன். எனது வீடு வழக்குச்சொத்திற்கு அருகில் உள்ளதால் நான் வழக்கமாக வழக்குச்சொத்திற்கு செல்வேன். வழக்குச்சொத்தில் எத்தனை படுக்கை அறைகள் உள்ளன என்றால் இரண்டு படுக்கையறை, ஒரு ஹால், ஒரு கிச்சன் உள்ளது. மாடியில் அறை உள்ளதா என்றால் இல்லை. மாடிக்கு செல்வதற்கு படிக்கட்டு எங்குள்ளது என்றால் சரியாக தெரியாது. வழக்குச்சொத்தின் நிலத்தொட்டி வீட்டிற்கு எந்தப்பக்கம் உள்ளது என்றால் சரியாக தெரியாது. வழக்குச்சொத்திற்கு நான் சென்றதில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. செண்பகவள்ளியும், அவரது கணவரும் வாடகை வீட்டில் வசித்து வந்த காலத்தில் திருட்டு ஏற்பட்டது. அப்போது செண்பகவள்ளியின் கணவர் என் மீது சந்தேகப்பட்டு, என்னிடம் கேட்டதில், எனக்கும், அவருக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் .........

சரியல்ல. சீத்தப்பட்டி கிராமத்தில், செண்பகவள்ளியின் கணவருக்கும், எனக்கும் பாத்தியப்பட்ட சொத்து இருந்தது. அது சம்மந்தமாக எனக்கும், அவருக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. சீத்தப்பட்டியில் இருந்த சொத்தில் நான் தற்போது குடியிருக்கவில்லை என்றால் அதில் இருந்த வீடு பழைய வீடு. அதை இடித்துவிட்டோம். சீத்தப்பட்டி வீட்டிலிருந்து எதற்காக நான் வெளியே வந்தேன் என்றால் பக்கத்தில் நான் சொந்தமாக வீடு கட்டியதால் வெளியே வந்தேன். வாதியின் இரண்டாவது திருமணத்திற்கு நான் செல்லவில்லை. வெங்கடாசலம், செண்பகவள்ளி ஆகியோர் கேட்டுக்கொண்டதால் வாதிக்கு இரண்டாவது திருமணம் நடந்தது என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதின்பேரில், வழக்குச்சொத்தையும், அதில் உள்ள உடமைகளையும் நான் பாதுகாத்து வந்தேன் என வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2, 4 பிரதிவாதிகள் அடியாட்களுடன் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து, அதில் உள்ள ஆவணங்களை எடுத்துச்சென்றனர் என்றும், எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.19 ஆவணம் வழக்குச்சொத்தை அபகரிக்க வேண்டி, நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. செண்பகவள்ளி வீடு கட்டியபோது, வாதியும்,அவரது அப்பாவும் உதவி செய்தனர் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதி மீது செண்பகவள்ளி மிகுந்த பாசத்துடன் இருந்து வந்தார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. செண்பகவள்ளியின் ஏடிஎம் கார்டை திருடிச்சென்று பிரதிவாதிகள் பணம் எடுத்தனர் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் செண்பகவள்ளி ஒரு உயில்

எழுதி வைத்துள்ளார் என எதிர்வழக்குரையில் சொல்லி, தாக்கல் செய்துள்ளனர். அந்த உயிலை நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் மூலம் நகல் எடுத்து பார்த்தேன். அந்த உயில் பொய்யானது. வாதிகளும், 1 ம் வாதியின் அப்பாவும், செண்பகவள்ளியுடன் எந்தக்காலத்திலும் சுமூகமாக இருந்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல. செண்பகவள்ளியின் இறுதிகாரியங்களை நான் செய்தேன் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், 1 ம் வாதியும் சேர்ந்து வழக்குச்சொத்தை அபகரிப்பதற்காக, பொய்யாக வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்

முதன்மை மாவட்ட நீதிபதி,

கரூர்